

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (13.01.2026) திருவண்ணாமலை மாநகராட்சி திண்டிவனம் சாலையில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து சேவையை மக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்), ஒ.ஜோதி (செய்யார்), மாநகராட்சி மேயர் திருமதி.நிர்மலா வேல்மாறன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் வடக்கு ஒன்றியம், செங்குன்றாபுரம் கிராமத்தில் வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெகன் பால்பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட நலத்திட்ட உதவிகள்,கலைஞர் நூலகம் திறப்பு விழா மற்றும் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழாவில் அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு கலைஞர் நூலகத்தை விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் A.R.R.சீனிவாசன் முன்னிலையில் திறந்து வைத்தார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி எஸ்.புதூர் பாரி வள்ளல் ஒன்றியம் வலசைப் பட்டி நியாயவிலைக் கடையில் முதல்வர், தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் பொங்கல் பரிசுத் தொகுப்பினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் வழங்கினார் . உடன் பொதுக் குழு உறுப்பினர் ஜெயராமன் , எஸ்.புதூர் ஒன்றிய செயலாளர் செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட

# தமிழ்நாடு மீனவர்கள் - படகுகளை விடுவிக்க - உரிய நடவடிக்கை மேற்கொள்வீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் மூலம் வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 14 – இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கும், தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் நேற்று (13.01.2026) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கும் உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (13.01. 2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், அறுவடைத் திருநாளான பொங்கல் பண்டிகையையொட்டி, தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள ஒரு துயரச் சம்பவம் தொடர்பாகவும், தொடர்ந்து அவர்கள் எதிர்கொண்டுவரும் இன்னல்கள் தொடர்பாகவும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

13.01.2026 அதிகாலையில், இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற இராமநாதபுரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாட்டு மீனவர்கள் இதுபோன்று தொடர்ந்து கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்படுவதும் மிகுந்த கவலையளிப்பதாக அவர் தனது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார். மேலும், தற்போதைய நிலவரப்படி, சமீபத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட, இதுவரை மொத்தம் 83 மீனவர்களும், 252 மீன்பிடிப் படகுகளும் இலங்கைவசம் உள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் துயரமான மற்றும் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டும், பொங்கல் பண்டிகையினை தங்கள் குடும்பத்தினருடன் கொண்டாடிட ஏதுவாகவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், தொடர்ந்து இதுபோன்ற கைது நடவடிக்கைகளைத் தடுத்திடவும், ஒன்றிய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சேர்க்க தேர்வான

# 50 திருநங்கைகளுக்கு பணி நியமன ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜன. 14 - தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சேர்க்க தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்ட 50 திருநங்கைகளுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில், தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சேர்க்க தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட 50 திருநங்கை யர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 திருநங்கை யர்களுக்கு நியமன ஆணைகளை வழங்கினார்.

2025–2026ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால், திருநங்கையருக்கு உரிய விழிப்புணர்வையும், வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பையும் வழங்குவதன் மூலம் அவர்களுடைய கண்ணியமான வாழ்வினை உறுதி செய்திட முடியும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்த உயர் நோக்கத்தினை முன்னிறுத்தி, ஓர் முன்னோடி முயற்சியாக திருநங்கையர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்திடத் திட்டமிடப்ப ட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 50 திருநங்கைகளைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, காவல்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநரின் பரிந்துரையில், ஊர்க்காவல் படை காவல்துறை தலைவர் அவர்களால்

50 திருநங்கைகளை தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் உறுப்பினராக நியமிக்க பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊர்க்காவல் படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக சென்னை பெருநகர காவல் ஆணையரகம், ஆவடி மற்றும் தாம்பரம் ஆகிய காவல் ஆணையரகங்களிலிருந்து 7 திருநங்கையர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வழங்கினார்.

முதற்கட்டமாக தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சென்னையில் 5 நபர்கள், தாம்பரத்தில் 15 நபர்கள், ஆவடியில் 10 நபர்கள், மதுரையில் 7 நபர்கள், கோயம்புத்தூரில் 7 நபர்கள் மற்றும் திருச்சிராப்பள்ளியில் 6 நபர்கள், என மொத்தம் 50 திருநங்கைகள் காவல் துறையுடன் இணைந்து போக்குவரத்து மேலாண்மை, திருவிழாக் காலங்களில் கூட்டநெரிசலைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் உறுப்பினராக நியமிக்கப்ப ட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர்/படைத்தலைவர் (பொறுப்பு) க.வெங்கடராமன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளிதரன், குடிமை பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல்படை தலைவர் திருமதி. வே.ஜெயஸ்ரீ ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி விருதுநகரில் நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டை வெற்றியடையச்செய்வது தொடர்பான மதுரை தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், மாநில இளைஞரணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் இளையராஜா தலைமையில், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விமல் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் முத்துராமன், எஸ்.ஓ.ஆர். தங்கபாண்டியன், சுதாகரன், நாகராஜன், டிஸ்கா அலாவுதீன், ஸ்ரீதர், சண்முகம், மதன்குமார், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் தென்பழஞ்சி சுரேஷ், ஜெகநாதன், காளிதாஸ், சாதிக், ஆதவன் அதியமான், ஜெகதீசன், ராஜதுரை உள்ளிட்ட திரளான கழக இளைஞர் அணியினர், கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

# அலங்காநல்லூர் - பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டிகளை துவக்கி வைக்கிறார்கள்!

## சிறப்பான வரவேற்பு கொடுக்க நான்கு தொகுதிகளில் சிறப்பு செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்-அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் ஏற்பாடுகள் தீவிரம்!

மதுரை, ஜன. 14 - மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலக புகழ்பெற்றதாகும், இதேபோல் பாலமேடு ஜல்லிக்கட்டு சிறப்புமிக்கதாகும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும், பாலமேடு ஜல்லிக்கட்டை கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் துவக்கி வைத்து பல்வேறு பரிசுகள் வழங்க உள்ளார்கள்.



விழாவில் பங்கேற்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வரலாறு காணாத வகையில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கும் வகையில் மதுரை வடக்கு மாவட்டத்தில் உள்ள மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, மேலூர் மற்றும் சோழவந்தான் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தனித்தனியே நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத் தில் இரண்டு நாட்களும் தலா ஒரு லட்சம் பேர் பங்கேற்கும் வகையில் தொண்டர்களிடம் எழுச்சியுரையாற்றினார். அதன் விபரம் வருமாறு:

உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வரும் 17ஆம் தேதி நடைபெறுகின்றது, இந்த மாபெரும் ஜல்லிக்கட்டு விழாவை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து தமிழர்களின் பாரம்பரிய மிக்க ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்று சிறப்பாக சீறிப்பாயும் காளைகளுக்கும், திமிரிவரும் காளைகளை அடக்கி பாராட்டு பெறும் மாடுபிடி வீரர்களுக்கும் பல்வேறு சிறந்த பரிசுகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

இதேபோல்சிறப்புமிக்க பாலமேடு ஜல்லிக்கட்டு வரும் 16ஆம் தேதி நடைபெறுகிறது இந்த ஜல்லிக்கட்டு விழாவை கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து சிறந்த ஜல்லிக்கட்டு காளைகளுக்கும் மாடுபிடி வீரர்களுக்கும் பல்வேறு பரிசுகளை வழங்கி பாராட்ட உள்ளார்.

இவ்விழாவில் பங்கேற்று சிறப்பிக்க வருகை தரவுள்ள முதல்வர் அவர்களுக்கும் துணை முதல்வர் அவர்களுக்கும் இரண்டு நாட்களும் பிரமாண்ட வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது. இதில் மதுரையில் இருந்து விழா நடைபெறும் இடம் வரை வழி நெடுகிலும் இரு வண்ண கொடியுடனும், வரவேற்பு பதாகைகளை கையில் ஏந்தியும் தலா ஒரு லட்சம் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று சிறப்பாக வரவேற்பு கொடுத்து சிறப்பிக்க ஏற்பாடுகள் செய்திட வேண்டும்.

அதற்காகத்தான் வடக்கு மாவட்ட திமுக சார்பில் மதுரை கிழக்கு தொகுதி, மதுரை மேற்கு தொகுதி, சோழவந்தான் மற்றும் மேலூர் தொகுதிகளில் தொகுதி வாரியாக தனித்தனியாக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடத்தியுள்ளோம்.

ஆகவே கழக நிர்வாகிகளும், கழகத்தினரும் முதல்வருக்கும் துணை முதல்வருக்கும் கொடுக்கப்பட உள்ள இந்த வரவேற்பு நிகழ்வை வரலாற்று நிகழ்வாக மாற்றிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்

மேலும் விருதுநகரில் நடைபெற உள்ள மாபெரும் இளைஞரணி மண்டல மாநாட்டினை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர் அணியினர் பங்கேற்று தமிழ்நாட்டிலேயே மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணியினர் தான் பெருமளவில் பங்கேற்று சிறப்பித்தார்கள் என்ற நட்பெயர் பெரும் வகையில் இளைஞர் அணியினர் செயலாற்ற வேண்டுமென கூறினார்.

நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெற்ற செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக நிர்வாகிகள், கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்றனர்.



தமிழர் திருநாளாம் சமூக நீதிக்கான திராவிடப் பொங்கல் விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிடப் பொங்கல் விழா மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக கொடியேற்றி தமிழர் திருநாள் திராவிடப் பொங்கலிட்டு சிறப்புரையாற்றி கழக நிர்வாகிகளுக்கு தமிழர் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். நிகழ்வில் J.ஹெலன் டேவிட்சன், என்.தில்லைசெல்வம், கரோலின் ஆலிவர்தாஸ் உட்பட கழக நிர்வாகிகள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.